## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 76/2023

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | சாதி | |
| த/பெ | அமாவாசை | மதம் | |
| ஊர் | | தொழில் | |
| மாவட்டம்; | | வயது | |
| | | தேதி | 12.12.2023 |

இன்று (12.12.2023) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தில் ஓட்டுன ராக பணி புரிந்து வருகிறேன். எந்த பணிமனையில் வேலை பார்க்கிறேன் என்றால் பல்லவன் சாலையில் உள்ள மத்திய பனிமனையில் உள்ளேன். எத்தனை வருடமாக வேலை பார்க்கிறேன் என்றால் 14 வருடமாக வேலை பார்க்கிறேன். வா.த.சா.ஆ 1 பிராமிசரி நோட்டு எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் என்னுடைய வீட்டில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ 1 எழுதிய போது யார் யார் இருந்தார்கள் என்றால் லம்பு (எ) வீரப்பன் அமிர்தாசலம் ஆகியோர்கள் இருந்தார்கள். எனது மனைவி எழுதினார்.கோவிந்தன் மற்றும் அவர்களது மனைவி விமலா ஆகியோர்கள் இருந்தார்கள். லம்பு (எ) வீரப்பன் என்பவர் எனது சொந்த அத்தையின் மகன் என்றால் இல்லை. எனக்கு எத்தனை சகோதரி என்றால் 2 சகோதரிகள்.அமிர்தசாலம் என்பவர் எனது தங்கையின் கணவர் என்றால் சரியல்ல. எனது

தங்கையின் பெயர் பரிமளா மற்றும் இன்னொரு தங்கையின் பெயர் பிரபாவதி. எனது தங்கை பரிமளா என்பவரின் கணவர்தான் அமிர்தாசலம் என்பவர் என்றால் சரியல்ல. பிராமிசரி நோட் எழுதியவர் சுடர்ஒளி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சுடர் ஒளி என்பவர் யார் என்றால் அவர் எனது மனைவி. எனது மனைவி சுடர்ஒளி என்பவர் வா.தசா.ஆ 1 ல் பிராமிசரி நோட்டில் கையெழுத்து இடவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.த.சா.ஆ 2 ஐ பிரதிவாதி நேரடியாக பெறவில்லை அவரது மகன் தான் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதி கோவிந்தன் பதில் அறிவிப்பு கொடுத்தார் அது எனக்கு தெரியாது. நான் எனது சாட்சிய பிராமண பத்திரிக்கையில் நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்களை நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். என்னுடைய முதன்மை சாட்சிய பிராமண வாக்குமூலத்தில் பிரதிவாதி என்னிடம் பலமுறை பணம் வாங்கி கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருடைய எதிர் வழக்குரையில் நான் எனது குடும்ப உறுப்பினர்கள் மூலம் பிரதிவாதியின் கையெழுத்தை ஃபோர்ஜரியாக போட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக என்றால் அது தவறான சங்கதி. பிரதிவாதி அவருடைய எதிர் வழக்குரையில் பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்று சொல்லி அதனை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைத்தால் உண்மை தெரிய வரும் என்று சொல்லியுள்ளார் அந்த விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்தகொண்டேன் கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப எனக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை. நான் அரசு வேலையில் இருந்து கொண்டே ஊரில் வட்டிக்கு விடும் தொழில்

செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய கடனை பைசல் செய்த பிறகும் அதிக வட்டி கேட்டு பிரதிவாதியை தாக்கியதால் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை நானும் புகார் கொடுத்திருந்தேன் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக கோர்ட்டுக்கு போங்கள் என்று அறிவுறுத்திவிட்டார்கள். நான் கொடுத்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் கொடுத்திருக்கிறேன். பிரதிவாதி என்னிடம் இந்த தாவா கடன் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் தவறு. என்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதால் அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி ஃபோர்ஜரியாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.த.சாஆ 1 ஸ்டாம்ப் மீதும் அதற்கு கீழ் கோவிந்தன் என இரண்டு கையெழுத்து போடப்பட்டுள்ளது அதில் ஸ்டாம்ப் மீதில் உள்ள கையெழுத்து திருத்தி எழுதப்பட்டுள்ளது. என்றால் ஸ்டாம்ப் மீது வழுக்கல் ஏற்பட்டதால் மீண்டும் கையெழுத்து இடப்பட்டுள்ளது. சாட்சி மீண்டும் வழுக்கியதால் மீண்டும் எழுதியிருப்பார்கள் என்று சாட்சியம் அளிக்கிறார். வா.த.சா.ஆ 1 பிரதிவாதியால் கையெழுத்து இட்டு கொடுக்கப்படவில்லை நான் எனது குடும்ப உறுப்பினர்களை பிரதிவாதி கொண்டு கையெழுத்து இட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இன்னொரு சகோததி பிரபாவதியின் கணவர் வழக்கறிஞர் தொழில் செய்கிறார் என்றால் சரிதான். எனது சகோதரியின் கணவர் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பொய்யான வழக்கு என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

I Additional Subordinate Judge,
Villupuram